DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE
C.C. No.364/2019
PROSECUTION WITNESS L.W.1/P.W.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோமதி | கணவர் பெயர் | சோமசுந்தரம் |
| கிராமம் | முத்தம்பாளையம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | – | வயது | |

**1,2 எதிரிகள் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 15.07.2025
(சாட்சி தாலுக்கா காவல்நிலைய நீதிமன்ற காவலரால் அடையாளம் காட்டப்பட்டார்.)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது முத்தம் பாளையத்தில் குடியிருந்து வருகிறேன்.

2) தேதி வருடம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் பெரிய காரியத்திற்காக பெருமாபாளையம் சென்றுவிட்டு, காலை 10.00 மணியளவில் திரும்பி என் வீட்டிற்கு டவுன் பஸ் ஏறி முத்தம்பாளையம், தம்பிகலை ஐயன் கோவில் பஸ் ஸ்டாப்பில் இறங்கி எனது வீட்டிற்கு செல்வதற்காக 20 அடி சென்றபோது, 3 நபர்கள் கோவில் அருகில் நின்று கொண்டிருந்தார்கள். எனக்கு பின்னால் ஒரு நபர் இரு சக்கரவாகனத்தில் வந்து, எனது தாலிக் கொடியை பறித்து சென்றுவிட்டார். நான் கீழே விழுந்துவிட்டேன். சத்தம் போடவே, அருகில் இருந்தவர்கள் வந்து என்ன ஆனது என கேட்டார்கள். நான் நடந்ததை சொன்னேன். பின்னர் நான் இரங்கம்பாளையம் காவல்நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) எனது

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.07.15 18:17:26 +0530

செயினை பறித்துச் சென்றவரை என்னால் அடையாளம் காட்ட முடியும். நீதிமன்றத்தில் உள்ள 2 வது எதிரி தான் என்னிடமிருந்து தாலிக் கொடியை பறித்துச் சென்ற நபர் ஆவார். அறுந்த நிலையில் இருந்த எனது தாலிக் கொடியை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில் பெற்றுக் கொண்டேன். பின்னர் அறுந்த நிலையில் இருந்த தாலிக் கொடியை பற்ற வைத்து நான் அணிந்து வருகிறேன். நான் தற்போது அணிந்துள்ள தாலிக் கொடியை தான் நீதிமன்றத்தின் மூலமாக பெற்றுக் கொண்டேன். (**தாலிக் கொடி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தனர்.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) புகாரிலும், போலீசார் என்னை விசாரித்தபோதும், செயினின் அடையாளம், மாடல், ஆகியவற்றை குறித்து கூறியுள்ளேனா என்றால் இல்லை. முதல் விசாரணையில் சொல்லியுள்ள 3 நபர்களின் அடையாளங்களை புகாரிலும், போலீசார் விசாரணையிலும் கூறினேனா என்றால் என்னிடமிருந்து செயினை பறித்துச் சென்றவரின் அடையாளத்தை கூறினேன். சம்மந்தபட்ட நபரின் உயரம், பருமன், நிறம் ஆகியவற்றை குறிப்பிட்டு புகாரிலும், போலீசார் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். நகையை பறித்துச் சென்ற நபரை போலீசாரிடம் பிடித்து ஒப்படைத்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு அருகே கடைகள் உள்ளது என்றால் சரிதான். இரு சக்கர வாகனத்தின் பதிவெண், நிறம் பற்றி புகாரிலும், போலீசார் விசாரணையிலும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் சமயத்தில் உடனே கூட்டம் கூடிவிட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் ஈரோடு – சென்னிமலை ரோடு, வாகனங்கள் அதிகமாக வந்து செல்லும் இடம் என்றாலும் சரிதான். அந்த இடம் ஜனநடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சம்பவம் நடந்த சமயத்தில் அங்கு யாரும் இல்லை. சத்தம் கேட்டு, அந்த இடத்தில் சுமார் 100 பேர் கூடியிருப்பார்களா என்றால் கூடியிருப்பார்கள். காவல்நிலையம் சம்பவ இடத்தின் அருகாமையில் உள்ளது என்றால் சரிதான். தகவல் கேள்விபட்டு எனது மகள் அன்பரசி அந்த இடத்திற்கு வந்துவிட்டார் என்றால் சரிதான். போலீசாரும் உடனடியாக அந்த இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றாலும், என்னிடமும், அங்கு கூடியிருந்தவர்களிடமும் விசாரணை செய்தார்கள் என்றாலும் சரிதான். புகாரிலும், போலீசார் விசாரணையிலும் 3 நபர்கள் வந்தார்கள் என்றும், அதில் ஒருவர் மட்டும் எனது செயினை பறித்துச் சென்றார் என்றும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். கண் இமைக்கும் நேரத்தில் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். போலீசார் புகார் எழுதி என்னிடமும், எனது மகளிடமும் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான்.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.07.15 18:17:33 +0530

போலீசார் செயினை பறித்து சென்ற நபரிடமிருந்து, கொடியை கைப்பற்றி, அங்கிருந்து காவல் நிலையத்திற்கு அவரை அழைத்துச் சென்றார்கள் என்றால் சரிதான். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து என்னையும், எனது மகளையும் விசாரித்துவிட்டு, அங்கிருந்த 5 நபர்களின் பெயர் மற்றும் விலாசங்களை என்னிடம் விசாரித்து கேட்டு வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான். நான் புகாரில் கையொப்பம் செய்தபோது, செயின் போலீசாரிடம் தான் இருந்தது என்றால் சரிதான். நான் புகாரில் கையொப்பம் செய்வதற்கு முன்பாகவே போலீசார் செயினை பறித்துச் சென்ற நபரை துருவிதுருவி விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் 2 வது எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், நான் சொன்ன தேதி, நேரம், விதத்தில் புகார் தரவில்லை என்றாலும், ஆஜர் எதிரியிடமிருந்து தாலிக் கொடியை போலீசார் கைப்பற்றவில்லை என்றாலும், நீதிமன்றத்திற்கு வெளியே முதன் முதலாக இன்று தான் போலீசார் 2 வது எதிரியை எனக்கு அடையாளம் காட்டினார்கள் என்றாலும் அதன்பேரில் தான் நான் 2 வது எதிரியை அடையாளம் காட்டுகிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று நானும் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் 2 வது எதிரியும் அந்த இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை ஒரு முறை தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான். புகார் பெறுவதற்கு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தபோது தான் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் புகார் கொடுத்துவிட்டு விசாரணை முடிந்து நான் எனது வீட்டிற்கு செல்லும்போது காலை சுமார் மணி 10.30 இருக்கும் என்றால் சரிதான். தற்போது வழக்கு கோப்பை பார்த்துவிட்டு, போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் முதல் பக்கத்தில் 6 பவுன் என்பதும், 2 வது பக்கத்தில் தொகை அடித்தல் திருத்தல்களுடன் உள்ளது என்றால் சரிதான். புகாரில் முதல் பக்கத்திலும், 2 வது பக்கத்திலும் முழுவதுமாக என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை**

**இல்லை.**

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2023.07.15 18:17:40 +0530

Judicial Magistrate No.I,
Erode.